*11*

# கொள்கைகளும் மறைவான கருத்துக்களும்

*வேதாகமம் (அதன் சில இடங்களில் சட்டங்கள் அடங்கியிருப்பினும்) வாழ்விற்கான சட்டங்களின் பட்டியலாக இருப்பதில்லை, ஆனால் இலக்கிய நடைகளின் பலவகை கொண்டதாக உள்ளது. தேவனுடனான உறவிற்குள் பிரவேசிக்கும்படி நம்மை ஊக்குவித்தல் என்பதே, அவர் இந்தப் பல்வேறு நடைகளில் மக்களிடம் பேசுவதற்கான நோக்கமாக உள்ளது (யோவான் 17:3; காண்க எபிரெயர் 8:10-12). நாம் அந்த உறவிற்குள் வளருகையில், அவர் நமக்குக் கொண்டுள்ள பின்வரும் மற்ற இலக்குகளை நாம் உணர்ந்து அறிகிறோம்; அவருடைய பரிசுத்தத்தில் பங்கேற்றல் (எபிரெயர் 12:10) மற்றும் அவருடைய குமாரன் இயேசுவுக்குள் வெளிப்படுத்தப் பட்டுள்ள வகையில் அவருடைய சாயலாக மாற்றப்படுதல் (ரோமர் 8:29; 2 கொரிந்தியர் 3:18; கொலோசெயர் 1:15).*

*வேதாகமத்தில் தேவன் மக்களுடன் நடந்துகொண்ட விதம் பற்றிக் கண்ணோக்குவதன் மூலம் நாம், அவர் கேட்டுக் கொள்பவை எவை மற்றும் அவர் அனுமதிப்பவை எவை என்பவற்றை அறிய முடியும். மேலும் நாம், நம்மைப் பற்றியும் சில விஷயங்களை அறிய முடியும்: சிந்திக்கும், மற்றும் கற்றுக்கொள்ளும் திறனுடனும், அவருடனான உறவிற்குள் நாம் பிரவேசிப்போமா இல்லையா என்பதை நாமே சுயாதீனமாகத் தேர்ந்துகொள்ளும் தன்மையுடனும் நம்மைத் தேவன் படைத்தார். அந்தத் திறனை நாம் வேதவசனங்கள் பற்றிய நமது படிப்பிற்குப் பயன்படுத்துகையில், நாம் புரிந்து கொள்ளக்கூடிய வகையிலும் விரிவான பகுதிகளில் நடைமுறைப்படுத்தக்கூடிய வகையிலும் கொள்கைகள் மூலமாகத் தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்தியுள்ளதில் அவரது ஞானத்தை நாம் பாராட்டுகிறோம். வெளிப்படுத்தப்பட்ட இந்தக் கொள்கைகளை நாம் எந்தச்* செயல்முறை *மூலமாக புரிந்துகொண்டு அவற்றைத் தர்க்கரீதியாக நடைமுறைப்படுத்த இயலும்?*

## கொள்கைகளும் தர்க்கமும்

வேதாகமம், கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு காலம், இடம் மற்றும் சூழ்நிலை ஆகிய எல்லாவற்றிற்கும் நேரடியாக உரைக்கப்பட்ட (வெளிப்படையான) சட்டம் ஒன்றைக் கொண்டிருப்பது இல்லை என்ற கண்டுபிடிப்பானது மக்களில் பலருக்குத் திகைப்பை ஏற்படுத்துகிறது. இது, வாழ்வின் எல்லாப் பகுதிகளுக்கும் வேதாகமம் உண்மையிலேயே ஒரு வழிகாட்டியாக இருக்க முடியுமா என்று சிலர் வியப்படையக் காரணமாகவும் ஆகியுள்ளது. கிறிஸ்துவின் அதிகாரத்திலேயே *ஒவ்வொரு*

*விஷயமும்* செய்யப்பட வேண்டும் என்று உரைக்கும் கொலோசெயர் 3:17ம் வசனத்தின் வெளிச்சத்தில் இது ஒரு முக்கியமான கேள்வியாக உள்ளது. வாழ்வில் உள்ள எல்லா விஷயங்களையும் உள்ளடக்கும் சட்டங்களின் பட்டியல் ஒன்று நமக்கு இராததால், பவுல் முழுமையாகத் தகவல் அறிவைப் பெறவில்லை என்று அது அர்த்தப்படுகிறதா?[1] வாழ்வின் சில பகுதிகள் அவரது (இயேசுவின்) அதிகாரத்தினால் ஆளுகை செய்யப்படுவதில்லையா? இந்தப் பாடத்தில் நாம், கொள்கைகள் மூலமாகத் தேவனுடைய சித்தம் செய்யப்படுத்தப்படுதல் என்பது எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இருப்பதில்லை என்பதைக் காண்போம் மற்றும் இவ்வாறாக, ஒவ்வொரு சூழ்நிலைக்கும் குறிப்பிட்ட சட்டங்கள் என்பதைக் காட்டிலும் இது ஒரு ஞானமான முன்வைத்தலாக இருக்கக்கூடும் என்பதையும் காண்போம்.

ஒருவேளை நாம் இந்தக் கருத்தை விவரிப்பதால் நன்கு புரிந்து கொள்ள இயலும். ஒரு மோட்டார் வாகனத்தை ஓட்டுவதற்குத் தேவனுடைய வார்த்தை எவ்வாறு நடைமுறைப்படுகிறது என்பது பற்றித் திரும்பவும் சிந்தித்துப் பாருங்கள். மோட்டார் வாகனங்கள் பற்றி வேதாகமம் வெளிப்படையாக (நேரடியாக) எதுவும் கூறுவதில்லை. வேதாகமத்தின் கடைசி எழுத்துக்கள் 1,900 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டபடியால், இந்த நவீன எந்திரங்கள் பற்றியகுறிப்பு ஒன்று வேதவசனங்களில் இருந்தால்தான் நாம் திகைப் படைவோம். மோட்டார் வாகனங்களைப் பற்றிய குறிப்பு இல்லாத இந்தக் குறைபாடு, அவற்றை நாம் எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றித் தேவன் நமக்கு வெளிப்படுத்தியதைக் கூறும் வசனம் எதுவும் இல்லை என்று அர்த்தப்படுகிறதா? ஒரு மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்துதல் பற்றி, இந்தக் கேள்வி தொடர்பாக இயேசுவின் அதிகாரத்துவம் உரைக்கும் எதன்மீதும் நாம் கவனம் செலுத்தாமல் எதைவேண்டுமானாலும் முடிவு செய்ய நாம் முற்றிலும் சுயாதீனம் உள்ளவர்களாக இருக்கிறோமா?

"இல்லை" என்பது இந்தக் கேள்விகளுக்குக் குறுகிய பதிலாக உள்ளது. இருந்தபோதிலும் நாம், தேவனைப் பிரியப்படுத்தவேண்டுமென்றால், மோட்டார் வாகனங்களை நாம் எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் சில கட்டுப்பாடுகளை நாம் செயல்படுத்த வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகள், மற்றவர்களைச் சரியாக நடத்துதலை உள்ளடக்கியிருக்கும் வேதாகமக்கொள்கைகளுக்கும் நாம் வாகனம் ஓட்டும் வகைக்கு இடைமுறைப்படும் அரசின் ஒழுங்குகளுக்கும் இடையில் நிலவுகிற இறுக்கமான நிலையை அடிக்கடி உள்ளடக்கியிருக்கும். இந்த இறுக்கத் திற்கு இயேசுவின் அதிகாரத்துவம் எவ்வாறு நடைமுறைப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு நாம் வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ள கொள்கைகளின் மறைவான கருத்துக்களைக் காணக்கூடியவர்களாக இருக்க வேண்டும். மறைவான மற்றும் குறிப்பு ஆகியவற்றினால் பகுத்தறியும் தர்க்க ரீதியான செயல்முறையை ஆராய நாம் சற்று நேரத்தை எடுத்துக் கொள்வோமாக.[2]

"மறைகருத்து" என்பதை அகராதியானது, நாம் இவ்விடத்தில் பயன்படுத்துகிறதான, "இரு முன்மொழிவுகளில் [உரைகளில்], முதலாவது உண்மையாக இருக்கும்போது இரண்டாவது தவறானதாக இருப்பதில்லை என்ற வகையில் அவற்றிற்கிடையிலான உறவு" என்ற வகையில் விளக்கப் படுத்துகிறது.[3] தர்க்கவியல் பற்றிய ஒரு புத்தகம் இதை இன்னும் விரிவாக விளக்கப்படுத்துகிறது:

*ஒரு விவாதத்தின் மூலக்கூற்றானது முடிவை மறைமுகமாக உணர்த்துகிறது என்று நாம் கூறும்போது, அந்த விவாதம் மதிப்புமிக்க உய்த்துணரும் விவாதமாக உள்ளது என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம். மிகவும் பொதுவாகக் கூறுவதென்றால், ஒரு வாக்கியம் அல்லது வாக்கியங்களின் ஒரு குழுவானது, வேறொரு வாக்கியத்தை மறைமுகமாக உணர்த்துகிறது என்றால், அது முந்திய வாக்கியம் உண்மையானதாக இருந்தால் பிந்தியதும் உண்மையானதாக இருந்தாக வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறது. மூலக்கூற்றானது நல்ல ஆங்கிலத்தில் இராததால், அது மதிப்புமிக்க உய்த்துணர்வு வாதத்தில் முடிவைக் கண்டறிகிறது என்று நாம் கூறுவதில்லை. வாக்கியங்களுக்கு இடையில் கொண்டிருக்கப்படக்கூடிய தர்க்கரீதியான உறவு என்பதே மறைவான கருத்தாக உள்ளது; மக்கள் ஒரு வாக்கியத்தில் இருந்து இன்னொரு வாக்கியத்தைத் தரவழைக்கும்போது நிகழ்த்துகிற செயல்பாடே அனுமானக் கருத்தாக உள்ளது.[4]*

*மீண்டுமாக நாம், சில உதாரணங்களைப் பயன்படுத்துவதால் இந்த விளக்கங்களின் நடைமுறை அர்த்தத்தை மிகச்சிறப்பாகக் காணமுடியும். ஒருவேளை நீங்கள் எனது பையில் நான், சமமான மதிப்புக் கொண்ட மூன்று அமெரிக்க நாணயங்களைக் கொண்டிருக்கிறேன் என்றும் அவற்றின் மொத்த மதிப்பு எழுபத்தி ஐந்து சென்ட்டுகள் என்றும் கூறுவதாக வைத்துக்கொள்வோம். நீங்கள் அமெரிக்க நாணயங்கள் பற்றி அறிந்திருந்தால், அந்த மூன்று நாணயங்களும் கால் டாலராக இருக்க வேண்டும் என்று அறிவீர்கள். இருப்பினும், அமெரிக்க நாணயங்களின் மதிப்பு பற்றி அறியாதிருத்தலானது தர்க்கவியல் சார்ந்த பிரச்சனையாக இராமல், அறிவுசார்ந்த பிரச்சனையாக உள்ளது. அமெரிக்க நாணயங்கள் பற்றி எதையேனும் ஒருவர் அறிந்திருந்தாலும் இல்லை என்றாலும், மறைவான கருத்தின் சத்தியம் ஒன்றுபோலவே உள்ளது. இது சத்தியத்தைப் பற்றிய பின்வரும் முக்கியமான உண்மையொன்றை விவரிக்கிறது: ஏதேனும் ஒரு விஷயம் உண்மையாக உள்ளது என்றால், நாம் அதை அறிந்திருந்தாலும் இல்லை என்றாலும் அல்லது அதை ஒப்புக்கொண்டாலும் இல்லை என்றாலும், அது உண்மையாகவே உள்ளது. சத்தியமானது மறைவான கருத்தாலும் அனுமானக் கருத்தாலும் கற்றுக்கொள்ளப்படும்போது கூட இவ்விதமாகவே இருக்கிறது.*

*இவ்விடத்தில், இன்னொரு விவரிப்பு வருகிறது. ஒருவேளை நீங்களும் நானும் ஒரு சுவரைக் கட்டிக்கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். சுவருக்கான அடிப்பாகத்தை நாம் இடுகையில், அந்த அடிப்பாகம் சரியாக பதிமூன்று அடிகள் நீளம் கொண்டிருக்க வேண்டும் என்று நாம் முடிவு செய்கிறோம். அந்த அடிப்பாகத்திற்கான மரக்கட்டைத் துண்டை நாம் எடுக்கும்போது, அது சரியாக எட்டு அடிகள் நீளமே உடையது என்று நாம் கண்டறிகிறோம். அப்போது நாம், விடுபட்டுள்ள இடத்தை அடைக்க மரக்கட்டையின் இன்னொரு துண்டை எடுத்து அந்த இடைவெளியில் பொருத்துவோம் என்பது தெளிவு. அது எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்? நாம் இடைவெளியை அளக்க முடியும், ஆனால் உண்மையில் அதை நாம் செய்யத் தேவையில்லை. மறைவான கருத்தின் மூலம் (இவ்விடத்தில் கணக்கியல்) நமக்கு ஐந்து அடிகள் நீளமுடைய ஒரு மரத்துண்டு தேவை என்று நாம் அறிகிறோம். நாம் அளவிடுவதின் மூலமாக (வெளிப்படையான அறிவு)க் கண்டுபிடித்தாலும்*

அல்லது பகுத்தறிவின்மூலமாக (மறைவான அறிவு) கண்டுபிடித்தாலும், அந்தப் பலகையின் நீளம் பற்றிய உண்மையானது ஒன்று போலவே உள்ளது.

மறைவான கருத்தின் மூலம் சத்தியத்தைக் கண்டறிதல் என்பது "யூகித்து உணருதல்" என்ற வார்த்தையினால் நாம் அர்த்தப்படுத்துவதாக உள்ளது. "யூகித்து உணருதல்" என்பது மறைகருத்து ஒன்றை நாம் உணர்ந்து அறியும்போது நாம் செய்யும் விவாதமாக உள்ளது.

இந்தச் செயல்முறை பற்றி எச்சரிக்கை வார்த்தையொன்று அவசியமாக உள்ளது. எச்சரிக்கையற்ற பகுத்தறிதல் என்பது உண்மையில் ஒரு விவாதத்தில் இருந்து தர்க்கரீதியாகப் பின்பற்றாதிருந்தாலும், அவ்வாறு இருப்பதாகக் காணப்பட முடியும். இது இருவழிகளில் ஏதாவது ஒன்றில் நடைபெற முடியும். ஒருவர், மூலக்கூற்றுகளின் ஜோடி ஒன்றில் இருந்து தர்க்கரீதியாகத்தொடரும் முடிவைத் தரவழைக்க முடியும் ஆனால் மூலக்கூற்றுகளில் ஒன்று அல்லது அதற்கு அதிகமானது தவறாக இருப்பதால் உண்மையில் இதுவும் தவறாக இருக்கிறது. தவறான மூலக்கூற்றுகள் உண்மையான முடிவைத் தர இயலாது. இதற்கு நேர்மாறாக, உண்மையான மூலக்கூற்றுகளில் இருந்து தவறான முடிவு ஒன்றை செல்லத்தக்க வகையில் தரவழைக்க இயலாது.[5] மேலும் ஒரு விவாதமானது மூலக்கூற்றுகளில் இருந்து தர்க்கரீதியாகத் தொடராதிருந்தாலும் உண்மையாக இருக்கக் கூடிய ஒரு முடிவை விளைவிக்கக் கூடும்.[6] ஒரு நல்ல விவாதம் இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும். முதலாவது, கேள்வியில் உள்ள முன்மொழிதல்கள் (கூற்றுகள்) *உண்மையானவையாக இருக்க வேண்டும்.* இரண்டாவது, அவைகளின் தொடர்பானது "மதிப்புள்ளதாக" வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், தர்க்கரீதியான தவறுகள அற்றதாக இருக்கும் வகையில் அவைகள் ஒன்றாக வைக்கப்படவேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்படும்போது மாத்திரமே, விவாதமானது ஆரோக்கியமானதாக உள்ளது என்று கூறப்படுகிறது.

இந்தத் தர்க்கச்செயல்பாட்டில் தவறுகளை ஏற்படுத்துதல் சாத்தியமாக உள்ளது என்றாலும் சத்தியத்தை நமக்குக் காண்பிப்பதற்கு விவாதித்தல் நம்பப்பட முடியாது என்று இது அர்த்தப்படுத்துவது இல்லை. வெளிப்படையான (நேரடியான) ஒரு கூற்றின் மூலமாக சத்தியம் கண்டுபிடிக்கப்படக்கூடியது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக, இரண்டு அல்லது அதற்கு அதிகமான கூற்றுக்களில் இருந்து தொடருகிற ஒரு மறைவான கருத்தைக் காண்பதினாலும் சத்தியம் கண்டுபிடிக்கப்பட முடியும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால். தர்க்கரீதியான கண்ணோட்டக் கருத்தில் இருந்து, சத்தியத்தை அறிவதற்கு வெளிப்படையான மற்றும் மறைமுகமான என்ற இரண்டுவழிகள் உள்ளன. இவற்றில் ஒன்று மற்றொன்றைப் போன்றே கட்டுவிப்பதாக உள்ளது. நடைமுறையில் தர்க்கரீதியான இந்தச்செயல்வகையானது, வேதாகமப்படிப்பில் பல மக்கள் நினைப்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமாகவே பயன்படுத்தப்படுகிறது. நாம் செயல்முறையில் இந்தக் கொள்கையைக் கண்ணோக்குவோமாக.

# மறைக்கருத்துக்களின் மூலமாக அறியப்படுகிற வேதாகமத்தின் சில உண்மைகள்

*முதலில் நாம், கார்களின் ஏற்றவகையிலான பயன்பாடு பற்றிய விளக்கத்திற்குத் திரும்புவோம். நாம் கார்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்கும்போது, வேகம், பயன்படுத்தவேண்டிய எரிபொருள், மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுக் கருவிகள் போன்ற விஷயங்களை ஒழுங்குபடுத்த அரசாங்கத்தினால் தரப்பட்ட சட்டங்களை நாம் உடனடியாக உணர்ந்தறிகிறோம். அரசாங்கத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியக் கிறிஸ்தவர்கள் கடமைப் பட்டுள்ளார்களா? நாம் கீழ்ப்படிய வேண்டும் என்றுள்ளது. ரோமர் 13:1-7ல் உள்ள பவுலின் விவாதம் மாத்திரமே, புதிய ஏற்பாட்டில் இந்தப் பாடக்கருத்தின் மீதான ஒரே கூற்றாக இராதிருப்பினும், அனேகமாக இவ்வசனப் பகுதி எல்லாக் கருத்துக்களையும் மிகவும் உள்ளடக்கிய ஒன்றாக இருக்கலாம். நாம், "மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படிய" வேண்டும், அதாவது, குடிமை அரசினால் இடப்பட்டுள்ள சட்டங்களுக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்று வேதாகமம் வெளிப்படையாக (நேரடியாக) போதிக்கிறது.*

*குடிமைக் கீழ்ப்படிதலின் பொதுவான கொள்கைக்கு விதிவிலக்குகளாக எதையேனும் வேதாகமம் கூறுகிறதா? ஆம், அது கூறுகிறது. யூதக் குடிமக்கள், ரோம ஆட்சியாளர்களுக்கு வரிகளைச் செலுத்த வேண்டிய கடைப்பட்டுள்ளனரா இல்லையா என்று இயேசுவினிடத்தில் கேட்கப்பட்ட போது, அவர் இப்படிப்பட்ட விதிவிலக்கு ஒன்றைக்குறிப்பால் உணர்த்தினார். அவரது பதிலுரையானது, இரண்டு உறுதி நிலைகளுக்கு இடையிலான ஒரு ஓட்டத்தை ஜாக்கிரதையாக வரையறுத்தது: "ஒரு பணத்தை எனக்குக் காண்பியுங்கள். இதிலிருக்கிற சொரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். அதற்கு அவர்கள்: இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்" (லூக்கா 20:24, 25). நடபடிகள் 3-5ல் அப்போஸ்தலர்கள், இஸ்ரவேலின் ஆட்சியாளர்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு இயேசுவைப் பற்றிப் பிரசங்கிப்பதை நிறுத்த வேண்டும் என்று கூறப்பட்டபோது அவர்கள், இயேசுவின் மேற்கண்ட வார்த்தைகளைச் சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம். "அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறது அவசியமாயிருக்கிறது ... என்றார்கள்" (நடபடிகள் 5:29).*

*இவ்வசனப் பகுதிகள் தேவனுடைய மக்கள் அரசாங்க அதிகாரங்களைப் பொறுத்த மட்டில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி வெளிப்படையான இரண்டு கூற்றுக்களை உள்ளடக்கி இருக்கின்றன. பொதுவாக நாம், நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும், ஆனால் அந்தச் சட்டங்கள் தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு இசைந்ததாக இராதபோது வேறு சில விஷயங்கள் நம்மிடம் வற்புறுத்த அல்லது அனுமதிக்கப்படுகின்றன. அந்த விஷயங்களில், அந்த விஷயங்களில் மாத்திரம் நாம் அரசின் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாதிருக்க உரிமை கொண்டுள்ளோம்.*

*இது கார்களை நாம் பயன்படுத்துவதற்கு எவ்வாறு நடைமுறைப்*

படுகிறது? நாம், தேவனுடைய பிரமாணங்களுக்கு முரண்பட்டிராத எல்லா சட்டங்களுக்கும் கீழ்ப்படியும்படி எதிர்பார்க்கப்படுகிறோம். அரசங்கமானது கார்களின் பயன்பாடு பற்றிய சட்டங்களைக் கொண்டிருப்பதால், அவற்றை நாம், நாட்டின் சட்டங்களின்படி பயன்படுத்த வேண்டும். விதிவிலக்குகளைப் பொறுத்தமட்டில் நாம், தேவனுடைய இயல்பு மற்றும் சித்தம் ஆகியவற்றிற்கு இசைவிணக்கமாக வாழ்வதில் இருந்து நம்மைத் தடைசெய்யும் சட்டத்தை மாத்திரம் கடைப்பிடிக்காதிருக்கச் சுயாதீனம் கொண்டுள்ளோம் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறோம். மாரடைப்பு ஏற்பட்டுள்ள ஒருவரை அருகில் உள்ள மருத்துவமனைக்குக கொண்டு செல்வதற்குக் காரை வேகமாக ஓட்டுதல் என்பது, அரசு விதிகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்ற பொதுவான கொள்கைக்கு ஒரு விதிவிலக்காக இருக்கலாம்.[7]

இந்த விஷயங்களை நாம் எவ்வாறு கற்றுக்கொள்ள முடியும்? இவற்றை நாம் தர்க்க அறிவால் அறிகிறோம். மிகவும் குறிப்பாக நாம் அவற்றை, தேவனுடைய பிரமாணத்தை மீறுபவை தவிர எல்லா சட்டங்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்ற வெளிப்படையான போதனைகளில் இருந்து தொடருகிற மறைவான கருத்தைக் காண்பதினால் கற்றுக்கொள்கிறோம்.

உண்மை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பல கூற்றுக்கள் இதே செயல்முறையிலேயே கற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக, இயேசு பெத்லகேமில் பிறந்தார் என்பதை வெளிப்படையான சாட்சியத்தில் இருந்து நாம் அறிகிறோம் (மத்தேயு 2:1-16; லூக்கா 2:4-12), ஆனால் மரியாள் மற்ற பிள்ளைகளையும் கொண்டிருந்தாள் என்பதை நாம் அறிகிறோம். மரியாள் இயேசுவின் தாயார் என்று நாம் அறிகிறோம் (மத்தேயு 1:16; 2:11). மேலும் நாம், இயேசுவின் சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் பற்றிய குறிப்பையும் கண்டறிகிறோம் (மத்தேயு 13:55, 56). இந்த மறைகருத்தைக்காணும் நாம், மரியாளுக்கு பிறந்தவர் இயேசு ஒருவர் மாத்திரமல்ல என்று உய்த்து உணர்ந்து அறிகிறோம்.

குறிப்பிட்ட சில உபதேச சத்தியங்களுக்கு நாம் இதே விஷயத்தை விவாதித்து அறிகிறோம். உதாரணமாக, டேவிட் ஆங்விஷ் (நான்) தமது பாவங்களுக்காக மனந்திரும்ப வேண்டும் என்று வேத வசனங்கள் எதிலும் வெளிப்படையாக கூறும் கூற்று ஒன்றை நாம் காண்பதில்லை. இருப்பினும் நடபடிகள் 17:30ம் வசனம், "மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்ளையிடுகிறார்" என்ற வெளிப்படையான கூற்றை ஏற்படுத்துகிறது. இந்தக் கூற்றில் இருந்து நாம், டேவிட் ஆங்விஸ் என்பவர் "எங்குமுள்ள மனுஷர் எல்லாரும்" என்பதின் ஒரு பகுதியாக இருப்பதால் இந்தக் கூற்றிலிருந்து நாம் டேவிட் ஆங்விஷ் மனந்திரும்ப வேண்டும் என்று உய்த்து உணருகிறோம்.

தேவன் ஒரே ஒரு சபையை நிலைநாட்டினார் என்ற உண்மையானது மறைவான கருத்திற்கு இன்னொரு உதாரணமாக உள்ளது. உண்மையில் இது இரு வழிகளில் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. முதலாவது நாம், *"சபை"* என்பதற்கு எண்ணற்ற குறிப்புகளைக் கண்டறிகிறோம் (1 கொரிந்தியர் 12:28; கலாத்தியர் 1:13; எபேசியர் 1:22). இயேசு தமது "சபையை" (ஒருமை; மத்தேயு 16:18) கட்டுவதாக வாக்குறுதி அளித்தார் என்பதையும் நாம் கவனிக்கிறோம். இந்த வசனப்பகுதிகளில் இருந்து நாம், ஒரே சபைதான் இருந்ததா என்று சந்தேகப்படத் தொடங்குகிறோம்.[8] எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல்

இரு சொற்றொடர்களைப் பயன்படுத்திய விதத்தைக் காணும்போது, இயேசு நிலைநாட்டிய சபைகளின் எண்ணிக்கை மற்றும் முதல் நூற்றாண்டில் இருந்த சபைகளின் எண்ணிக்கை பற்றிய எல்லா சந்தேகங்களும், நீக்கப்படுகின்றன. தேவன் "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல் லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" என்று பவுல் எபேசியருக்கு 1:22, 23ல் எழுதினார். எபேசியருக்கு எழுதிய நிருபம் முழுவதி லும் பவுல், "சரீரம்" என்ற சொற்றொடரை "சபை" என்பதன் பொருள் தரும் சொல்லைப் பயன்படுத்தினார் (எபேசியர் 3:6; 4:12, 16; 5:23, 30). எபேசியர் 2:16 மற்றும் 4:4 ஆகியவற்றில் அவர், "ஒரே சரீரம்" உண்டு என்று கூறினார். "ஒரே ஒரு சரீரமே உண்டு" என்று அவர் எங்காவது வெளிப்படையாகக் கூற்றை ஏற்படுத்தி இருக்கிறாரா? இல்லை, ஆனால் சபையும் சரீரமும் ஒன்று என்றால், ஒரே ஒரு சரீரமே உண்டு, எனவே மறைவான கருத்துணர்வின்படி ஒரே ஒரு சபைதான் உண்டு என்றாகிறது. மேலும் எபேசியர் 5:23ல் நாம், கிறிஸ்துவே "சரீரத்தின் இரட்சகராக" இருக்கிறார் என்று அறியுமிடத்தில், இரட்சிக்கப்பட்டவர்களுடன் உறுப்பினராயிருக்க ஒருவர் ஒரே சபையின் உறுப்பினராக இருக்க வேண்டும் என்று நாம் உய்த்துணர முடிகிறது.

## முடிவுரை

மறைவான கருத்து மற்றும் உய்த்துணருதல் மூலமாக விவாதித்தலின் செயல்முறையைப் பரிசோதிக்க நேரம் எடுத்துக்கொண்டுள்ள நாம், இவ்விடத்தில் அலுப்புள்ளவர்களாக அல்லது சற்றுப் பயப்படுத்தப் பட்டவர்களாகக கூடக் காணப்படலாம். இந்தக் கலந்துரையாடலானது வேதாகமப் படிப்பை அது இருக்க வேண்டியதைக் காட்டிலும் அதிகக் கடின மானதாகக் காணப்படுவதாக்கலாம். இருப்பினும் நம்மில் பெரும்பான்மை யானவர்கள் தாமாகவே நிகழ்த்துகிற செயல்முறையில் உள்ள ஒவ்வொரு படிநிலையையும் கண்ணோக்க நேரம் எடுத்துக்கொண்டது மாத்திரமே இங்கு நாம் செய்துள்ளோம் என்பதை நினைவுகூரக் கடவோம். விசுவாசிகள் என்ற முறையில் நாம், நமது வேதாகமப்படிப்பை மேம்படுத்த முயற்சி மேற்கொள்ள வேண்டும், நாம் விசுவாசிப்பதை மிகத்தெளிவற்ற வகையில் உரைக்குமளவுக்கு அஜாக்கிரதையான சிந்தித்தலை அகற்ற நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே வேளையில் நாம், தேவன் தமது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்த அவர் தேர்ந்து கொண்டுள்ள வழியின் ஞானத்தை நாம் காணாது விடுமளவுக்கு, செயல்முறையில் அதிகம் ஈடுபாடு உடையவர்களாகி விடாது இருப்போமாக. தேவன் தம்முடன் நாம் ஒரு உறவில் பிரவேசிப்பதை நாமே தேர்ந்துகொள்ள அனுமதிக்கிறார். நாம் தேவனுடைய சித்தத்திற்கும் கிறிஸ்துவின் அதிகாரத்திற்கும் கண்டிப்பான உடன்பாட்டைப் பராமரிக்கையில், அவர் பல சூழ்நிலைகளில் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய சத்தியத்தின் மாபெரும் கொள்கைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

---

குறிப்புகள்

[1]பல்வேறு வடிவங்களை எடுத்துள்ள இந்தக் குற்றச்சாட்டு, வேதாகமத்தை

விமர்சிப்பவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நவீன யுகத்தின்கண்டுபிடிப்புகளுக்கு முன் வேதாகம எழுத்துக்கள் முழுமையடைந்தன என்பது, வேதாகமம் இன்றைய நாட்களின் வாழ்வின் சிக்கல்கள் பற்றிப் பேச முடியாது என்று அர்த்தப்படுகிறது என்பதாக அவர்கள் நம்புகின்றனர். ஒரு கருத்தில் இந்த விமர்சகர்கள், வேதாகமம் சட்டங்களின் புத்தகமாக மாத்திரம் உள்ளது என்ற கருத்தை மாத்திரம் வேறொரு வழியில் வெளிப்படுத்தி இருக்கின்றனர். இதற்கு நேர்மாறாக, வேதாகமம் அப்படிப்பட்ட புத்தக மாக இருப்பதில்லை மற்றும் அவ்வாறு இருப்பதாக அது ஒருக்காலும் உரிமைகோரிய தில்லை. இருந்தபோதிலும் வேதாகமம் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துவதால் முற்றிலும் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. தேவன் எல்லாக் காலங்கள், இடங்கள் மற்றும் சூழ்நிலைகளிலும் நடைமுறைபடுத்தபடக்ககூடிய கொள்கைகளைப் போதிக்கும் வடிவில் தமது சித்தத்தை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை நாம் காணும்போது, தேவனுடைய ஞானத்தை நாம் பாராட்டியாக வேண்டும். [2]தர்க்கவியலைப் பயன்படுத்துதலையும், ஒரு மறைவான கருத்தைக்காணும் செயல்முறையையும் குறிப்பாக சரியாக உய்த்துணர்வுக் கருத்தைத் தரவழைப்பதையும் சிலர் விமர்சித்துள்ளனர். இந்த விமர்சகர்கள், வாதம் செய்தல் என்பது தவறாகக்கூடும் என்பதால், நாம் சரியாக விவாதித்து இருக்கிறோம் என்று கூற உரிமையில்லை என்பதாலும், எனவே சத்தியம் என்று நாம் உணர்ந்துள்ள விஷயங்களை மற்றவர்கள் மீது திணிக்க முயற்சி செய்ய முடியாது என்று விவாதம் செய்கின்றனர். இதற்குப் பதில்செயல் என்ற வகையில் நான், மக்கள் சரியற்ற வகையில் விவாதம் செய்யக்கூடும் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும், ஆனால் இது எல்லா விவாதங்களையும் மதிப்பற்றதாக ஆக்குகிறது என்ற கருத்திற்கு எதிராக நான் அறைகூவல் விடுக்கிறேன். விவாதம் செய்தல் என்பது, அறிவியல் அறிவு மாத்திரமே நம்பப்படக் கூடியதாக உள்ளது என்ற செயல்விளைவுக்கு வருகிறது என்று சிலர் விவாதிக்கின்றனர். இதனால் அவர்கள் நமது புலன்களைக் கொண்டு அனுபவிக்கும் விஷயங்களை மாத்திரமே நாம் அறிய முடியும் என்று பொதுவாக அர்த்தப்படுத்துகின்றனர். இந்தக் கண்ணோட்டத்தில் இரு பிரச்சனைகள் உள்ளன. (1) அறிவியல் அறிவானது தர்க்கத்தை உள்ளடக்கி இருக்கிறது. அறிவியல் அறிஞர்கள், குறிப்பிட்ட சில கருதுகோள்களை உற்றுநோக்கி பின்பு தாங்கள் உற்று நோக்கியுள்ள கருதுகோள்களில் இருந்த மற்ற கருதுகோள்களும் நிலவுகின்றன என்று முடிவு செய்கின்றனர் (செல்களுக்குள்ளாக புறோட்டான்களும் நியூட்ரான்களும் உள்ளன என்பது ஒரு உதாரணமாக உள்ளது). (2) நமது புலன்கள் ஏமாற்றப்படக்கூடும். தண்ணீர் உள்ள கண்ணாடி டம்ளர் ஒன்றிற்குள் ஒரு பென்சிலை இடுங்கள். அப்போது அந்தப் பென்சில் வளைந்துள்ளது என்று உங்கள் கண்கள் உங்களுக்குக் கூறும். ஒளிவீசும் சூரிய வெளிச்சம் உள்ள ஒரு நாளில், நெடுஞ்சாலையில் உங்களுக்கு முன்பாகப் பார்வையைச் செலுத்துங்கள். அப்போது அங்கிராத ஒருதண்ணீர்க் குட்டையை நீங்கள் காண்பீர்கள். நமது கண்கள் சில வேளைகளில் நம்மை ஏமாற்றுவது ஏன் என்பதை நாம் புரிந்து கொண்டு அப்படிப்பட்ட வேளைகளை அனுமதிக்கிறோம், ஆனால் அப்படிப்பட்ட தவறுகளின் காரணத்தால் நாம் நமது புலன்கள்மூலமாகச் சத்தியத்தை அல்லது உண்மைகளை அறியும் சாத்தியக் கூற்றை தள்ளிவிடுவதில்லை. விவாதம் செய்தல் என்பது சத்தியத்தை அறியும் வழியாக உள்ளது என்பதைப் புறக்கணிக்கும் மக்களுக்கு, அவர்கள் அந்த முடிவை அடைய விவாதத்தையே பயன்படுத்தியுள்ளனர் என்பது எனது இரண்டாவது பதிலாக உள்ளது. தவறான விவாதத்தின் குறிப்பிட்ட உதாரணம் மற்றும் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள தொடர்பை அவர்கள் அனுபவிக்க (காண, கேட்க, தொட, முகர அல்லது சுவைக்க) இயலாது. அதுவே (தவறான) தர்க்கத்தினால் அவர்கள் தாங்களே அடைந்துள்ள முடிவாக

உள்ளது. இந்த விவாதமும் இதன் முடிவும், முடிவை அடைவதில் பயன்படுத்தப்பட்ட செயல் முறையுடன் சீர்பொருத்தம் அற்றதாக உள்ளன. இவ்வாறாக விவாதமானது தனது சொந்த கனத்தின்கீழ் விழுகிறது. [3]*Random House Webster's College Dictionary,* 2d ed. (1999), s.v. "implication." [4]Stephen F. Barker, *The Elements of Logic,* 2d ed. (New York: McGraw-Hill Book Co., 1965), 24. [5]*... கண்டறிவு விவாதம் (மறைமுகக் கருத்துக்கள் பயன்படுத்தப்படும் விவாதவகை) மதிப்பு மிக்கதாக இருக்கும்போதுகூட, அதன் முடிவு உண்மையாக இராதிருக்கலாம். உதாரணமாக, "பறக்கிற எல்லா உயிரினங்களும் சிறகுகளை கொண்டுள்ளன; எல்லாப் பன்றிகளும் பறக்கின்றன; ஆகையால் எல்லாப் பன்றிகளும் சிறகுகளைக் கொண்டுள்ளன" என்பது கண்டறியும் வகையில் மதிப்புள்ள ஒரு விவாதம் உள்ளது; அதாவது, மூலக்கூற்றுகள் யாவும் உண்மையாக இருக்கின்றன என்றால், முடிவும்கூட உண்மையாகவே இருப்பது அவசியமாகும். ஆனால் மூலக்கூற்றுக்கள் உண்மையாக இராதபடியால் முடிவானது தவறாக இருக்கிறது, அது சாத்தியமாக உள்ளது* (Ibid., 24). [6]*செல்லத்தகாத வகையில் அடையப்பட்ட முடிவு உண்மையாக இருக்கலாம் என்பதை நாம் கவனிக்க வேண்டும். உதாரணமாக, "எல்லாப் பறவைகளும் சிறகுகளைக் கொண்டுள்ளன மற்றும் எல்லாக் கோழிக் குஞ்சுகளும் சிறகுகளைக் கொண்டுள்ளன; எனவே எல்லாக் கோழிக்குஞ்சுகளும் பறவைகளாக உள்ளன" என்பது விவாதம் செல்லத்தக்கதாக இராவிட்டாலும், உண்மையாக இருக்கக் கூடிய முடிவை உடைய விவாதமாக உள்ளது. (இந்த உதாரணம் செல்லத்தக்கதாக உள்ளது என்று ஒருவர் காணாவிட்டால், ஒப்புவமை ஒன்றைப்பயன்படுத்துதல் என்பது அவருக்குக்காண்பிக்கக்கூடிய நல் வழியாக இருக்கிறது. நாம் அவருக்கு, "இது மதிப்புள்ளதாக இருக்கிறது என்று நீங்கள் கூறினால், நீங்கள் 'எல்லாப் பறவைளும் கால்களை கொண்டுள்ளன மற்றும் எல்லாப் பன்றிகளும் கால்களைக் கொண்டுள்ளன, எனவே எல்லாப் பன்றிகளும் பறவைகளாக உள்ளன' என்றும் கூறலாம்" என்று கூறுகிறோம். இவ்வாறாக நாம் அவருக்கு, விவாதத்தின் இந்த நடையில், மூலக்கூற்றுகள் மதிப்புள்ள கண்டறிதல்கள் அவசியப்படுகிறது என்ற வகையில் முடிவை ஆதரிப்பதில்லை என்று காண்பிக்கிறோம்.)* (Ibid.) [7]*இது, சில கொள்கைகள் மற்ற கொள்கைகளைக் காட்டிலும் மிகவும் முக்கியமானவையாக உள்ளன என்று நமக்குக் காண்பிக்கும் உதாரணம் ஒன்றாக மட்டும் உள்ளது. இங்கு ஆழ்ந்து ஆலோசனை செய்யப்படும் விஷயத்தில், தேவனுக்குக் கீழ்ப்படியும்கொள்கையானது அரசாங்கத்திற்குக் கீழ்ப்படியும் கொள்கையை விட மேலோங்கி இருக்கிறது. சட்டங்களை குருட்டுத் தனமாக ஆசரித்தலைக் காட்டிலும் மக்களுக்கு மிகச்சிறந்த விஷயங்கள் முன்னுரிமை பெறுகின்றன என்பது இன்னொரு உதாரணமாக இருக்கும். இந்தக் கருத்தை ஒவ்வொருவரும் புரிந்து கொள்வதில்லை. இந்தக் கருத்தானது சுவிசேஷ விபரங்களில், மக்களின் நலன் என்பது இடர்பாட்டில் இருந்தபோது, இயேசு பிரமாணங்களை ஆசரிக்கவில்லை என்று, இயேசுவின் நாட்களில் இருந்த மதத்தலைவர்களால் அவர் விமர்சிக்கப்பட்டது பற்றிப் பல முறைகளில் விவரிக்கப்பட்டுள்ளது (உதாரணமாக, மாற்கு 2:13-17, 23-28; 3:1-6 ஆகிய வசனங்களைக் காணவும்). ஓய்வுநாளில் அவர்கள் ஒரு ஆட்டை குழியில் இருந்து இழுத்து விடுவார்கள் இருப்பினும் அந்த நாளில் தாம் குணப்படுத்தியதற்காகத் தம்மை விமர்சிப்பார்கள் என்பது ஏன் என்று விளக்கும்படி அவர்களுக்கு அறைகூவல் விடுத்தபோது, அவர் இந்த கண்ணோட்டத்தினுடைய மதியற்ற தன்மையையும் தம்மை விமர்சித்தவர்களின் சீர்பொருத்தமற்ற தன்மையையும் காண்பித்தார். (காண்க மத்தேயு 12:9-14.)* [8]*இது, "சபை" என்ற சொற்றொடர் சிலவேளைகளில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்த சபையைக் குறிப்பிடப் பயன்பட்டது என்பதைக் கவனியுங்கள் (காண்க 1 கொரிந்தியர் 1:2). மேலும் சிலவேளைகளில் "சபைகள்" என்ற*

*குறிப்புகளும் இருப்பதைக் கவனியுங்கள் (பன்மை; நடபடிகள் 15:41; 16:5; 2 கொரிந்தியர் 8:1; கலாத்தியர் 1:2). Ekklesia என்ற கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாட்டில் பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலவேளைகளிலே இது, நாம் உலகளாவிய சபை என்று அழைக்கும் விஷயத்தைக் குறிப்பிடுவதாக உள்ளது. மற்ற வேளைகளில் இது, நாம் "சபைக் குழுமம்" ["பிராந்திய சபை"] என்ற கருத்தில் பயன்படுத்தும் விஷயத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது.*